DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 136/2022**

Deposition of witness for Prosecution அ.சா.11

Name : ராஜ்கமல்
Father/ Husband Name : மாரி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 18.11.2025.

( இந்த சாட்சி பதிவானது காணொலி காட்சி வழியாக மாண்புமிகு. சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் சாட்சி ஆஜராகி காணொலி காட்சி வழியாக விசாரித்து பதிவு செய்யப்பட்டது)

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது சென்னை பெருநகர காவல் ஜெ-1 சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.03.2020-ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தழுதனூர் கிராமத்தை சேர்ந்த மாதவன் மனைவி மஞ்சுளா என்பவரை விசாரிக்க நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை வேண்டி எழுதி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.49/2020 இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) மற்றும் 4 of TNPHW act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடமான தழுதனூரில் உள்ள வாதியின் வீட்டிற்கு முன்பு சென்று அங்கிருந்த சாட்சிகள் சுப்பிரமணியன் மற்றும் சேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கின் வாதியான மஞ்சுளா, அகல்யா, அபிநயா, சின்னதம்பி, மாதவன், ராணி, சித்ரா, இந்திரா, பஞ்சவர்ணம், கவிதா, சுப்பிரமணியன் மற்றும் சேகர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரியவந்ததால் வழக்கின் எதிரிகளை தேடியதில் எதிரிகள் தலைமறைவாகிவிட்டனர். பின்னர் 23.03.2020-ம் தேதி எதிரிகள் கணம் சிவகங்கை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுவிட்டனர். பின்னர் 10.06.2020-ம் தேதி வழக்கின் காயம்பட்ட வாதிக்கும் சாட்சிகளுக்கும் காயச்சான்றிதழ் பெற வேண்டி தேவகோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவதாணு அவர்களை விசாரித்ததில் வாதி மஞ்சுளா, அபிநயா, சின்னதம்பி ஆகியோர்களுக்கு சாதாரண காயம் என்றும் சாட்சி அகல்யா சிகிச்சையில் இருந்து தன்னிச்சையாக சென்றால் காயத்தின் தன்மை பற்றி கூற இயலாது என்று சான்று கொடுத்தார். இவ்வழக்கின் புலன் விசாரணையை இத்துடன் முடித்து எதிரியான ராமச்சந்திரன் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) (எண்ணம் 4 ) மற்றும் 4 of TNPHW Act (எண்ணம் 3) ன் கீழும் எதிரி சுகந்தி மீது இதச பிரிவுகள் 294(b), 323- ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவம் சம்பந்தமாக எத்தனை காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் 16.03.2020-ம் தேதி சுமார் 15.00 மணியளவில். 15.00 மணியளவில் தகவல் கிடைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாகவே புகார் மனு எழுதப்பட்டிருந்ததா என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வாதியின் வீட்டிற்கு முன்பு தூனுக்குடி- செலுகை மெயின் ரோடு என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு நான் நேரடியாக சென்றேனா என்றால் 16.03.2020-ம் தேதி மாலை 06.30 மணிக்கு நேரில் சென்று பார்வையிட்டேன். புகாரில் கல்லுக்கால் ஊன்றுவதில் தான் பிரச்சனை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் சம்பவம் இடத்திற்கு சென்ற போது அங்கு கல்லுக்கால்கள் இருந்ததா என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் வரைபடத்தில் கல்லுக்கால்கள் இருந்ததாகவோ

ஊன்றப்பட்டதற்கான அடையாளம் எதுவும் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. 1ம் எதிரியான ராமச்சந்திரன் 16.03.2020-ல் என்னிடம் ஒரு புகார் கொடுத்தாரா என்றால் சரிதான், அதன் பேரில் ஒரு வழக்கு தாலுகா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரின் பேரில் காவல் நிலைய குற்ற எண்.48/2020 இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 16.03.2020-லிருந்து 18.03.2020 வரை 1ம் எதிரி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் ஞாபகமில்லை. 1ம் எதிரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றும்அது வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் மறைத்து சாட்சியம் அளிககிறேன் என்றால் சரியல்ல.

3. காவல் நிலைய ஆணை எண்.566 ன்படி வழக்கு எதிர் வழக்கை எவ்வாறு விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதன்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் குற்ற இறுதி அறிக்கையில் அந்த எதிர் வழக்கை பற்றி குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டும் என்றால் பி.எஸ்.ஓவின் முழுவிவரம் படிக்க வேண்டும். இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கையில் எதிர் வழக்கை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் சாட்சிகள் 1 முதல் 12 வரை உள்ள 16.03.2020 அன்று விசாரிக்கப்பட்டிருந்தார்கள். சாட்சி 13 மருத்துவர் சிவதாணு 10.06.2020 அன்று விசாரிக்கப்பட்டுள்ளார். ஆனால் ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் அனைத்தும் 05.07.2022 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி நினைவில்லை.

4. குற்ற எண்கள்.48 /2020 மற்றும் 49/2020 ஆகிய முதல் தகவல் அறிக்கைகள் 23.03.2020-ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி நினைவில்லை. இடம் சம்பந்தமாக இருதரப்பினருக்கும் பிரச்சனை இருந்த விவரம் விசாரணையில் தெரியவந்தது. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் வாக்கு மூலங்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் உயரதிகாரிகளின் வேண்டுகோளுங்கிணங்க பொய்யான புகாரின் பேரில் இந்த

வழக்கை பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையான சம்பவம் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அ.சா.1யை விசாரிக்கும் போது 16.03.2020-ம் தேதி நான் வீட்டில் இருந்தேன் என்றும் அப்போது சாட்சி அபிநயா, அகல்யா மற்றும் எனது அப்பா இருந்ததாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் வீட்டினுள் இருந்ததாக வார்த்தை எதுவும் இல்லை, வீட்டிற்கு வெளியில் இருந்ததாக விசாரணையில் தெரிந்து கொண்டேன். வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கு ஏற்பட்ட காயத்தை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.